ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2303/17 - 2022 ඔක්තෝබර් මස 26 වැනි බදාදා - 2022.10.26
2303/17 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

### அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1)(அ) உப உறுப்புரையின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், 2022, யூலை மாதம் 22 ஆந் திகதிய 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டதுடன், 2022, ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு மேலும் திருத்தப்படுகின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ரணில் விக்கிரமசிங்க,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2022, ஒற்றோபர் 26.

1A - G 37870 — 17 (2022/10)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை

(1) அவ்வறிவித்தலில் "இல. 01. பாதுகாப்பு அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:

(அ) அதன் I ஆவது நிரலில் இல. 25 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம்;

(ஆ) அதன் I ஆவது நிரலில் இல. 26 மற்றும் 27 ஆகிய விடயங்களை முறையே 25 மற்றும் 26 என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் II ஆவது நிரலில் இல. 27 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம் ;

(ஈ) அதன் III ஆவது நிரலிலுள்ள பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம் ;

- (1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க) ஸ்ரீலங்கா தொலைத்தொடர்புகள் சட்டம்

(2) அவ்வறிவித்தலில் "இல. 02. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:

(அ) அதன் II ஆவது நிரலிலுள்ள பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம் ;

32. கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

(ஆ) அதன் III ஆவது நிரலிலுள்ள பின்வரும் விடயங்களை நீக்குவதன் மூலம் ;

- (1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) வியாபாரப் பெயர்ச் சட்டம்
- (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) கம்பனிகள் சட்டம்
- (1964 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வர்த்தக அடையாளச் சட்டம்
- (1935 ஆம் ஆண்டின் 61 இலக்க) சீட்டுக் கட்டளைச் சட்டம்
- (1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) பொது ஒப்பந்தச் சட்டம்

(3) அவ்வறிவித்தலில் "இல. 14. கமத்தொழில் அமைச்சர்" எனும் தலைப்புத் தொடர்பில் பின்வருமாறு:

(அ) அதன் II ஆவது நிரலில் இல. 8 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம்;

(ஆ) அதன் II ஆவது நிரலில் இல. 9 இலிருந்து 17 வரையான விடயங்களை முறையே 8 இலிருந்து 16 வரையென மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(4) அவ்வறிவித்தலில் "இல. 19. கைத்தொழில் அமைச்சர்" எனும் தலைப்புத் தொடர்பில் பின்வருமாறு :

(அ) அதன் II ஆவது நிரலில் இல. 7 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம்;

(ஆ) அதன் II ஆவது நிரலில் இல. 8 இலிருந்து 28 வரையான விடயங்களை முறையே 7 இலிருந்து 27 வரையென மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் II ஆவது நிரலிலுள்ள இல. 27 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்;

28. கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

29. வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் கம்பனி

(ஈ) அதன் III ஆவது நிரலிலுள்ள "(1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் மேம்படுத்துகைச் சட்டம்" எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்;

- *(1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க)* வியாபாரப் பெயர்ச் சட்டம்
- *(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க)* கம்பனிகள் சட்டம்
- *(1964 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க)* வர்த்தக அடையாளச் சட்டம்
- *(1935 ஆம் ஆண்டின் 61 இலக்க)* சீட்டுக் கட்டளைச் சட்டம்
- *(1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க)* பொது ஒப்பந்தச் சட்டம்

(5) அவ்வறிவித்தலில் "இல. 03. தொழில்நுட்ப அமைச்சர்" எனும் தலைப்புத் தொடர்பில் பின்வருமாறு:

(அ) அதன் I ஆவது நிரலில் இல. 10 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்;

11. அதிகரித்துவரும் போட்டிகரமான சந்தைகளில் பொது நன்மையைப் பாதுகாத்து தொலைத்தொடர்புத் தொழிலில் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக தொலைத்தொடர்பு நடவடிக்கைகளை ஒழுங்குறுத்துதல்

12. டிஜிட்டல் தொழில்நுட்பத் தொழிலை விரிவுபடுத்தல் தொடர்பான நடவடிக்கைகள்

13. பசுமைத் தொழில்நுட்பக் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக உரிய அமைச்சுக்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

(ஆ) அதன் I ஆவது நிரலில் இல. 11 மற்றும் 12 ஆகிய விடயங்களை முறையே 14 மற்றும் 15 என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் II ஆவது நிரலில் இல. 4 ஆவது விடயத்தக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்;

5. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் இணைந்த நிறுவனங்கள்

6. ரொபோ தொழில்நுட்பத்துக்கான அதிசிறப்பு நிலையம்

(ஈ) அதன் III ஆவது நிரலிலுள்ள *"(1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க)* இலங்கை தரவளவு நிறுவனச் சட்டம்" எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் ;

- *(1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க)* ஸ்ரீலங்கா தொலைத்தொடர்புகள் சட்டம்
- *(2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க)* தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம்

EOG *10 - 0237*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.